செய்தி வெளியீடு எண்: 085 நாள்: 29.01.2020

<u>செய்தி வெளியீடு</u>

## <u>தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், சென்னை – 34.</u>

## <u>கணினி இயக்குபவர் மற்றும் இளநிலை உதவியாளர் பதவிகளுக்கான தேர்வுகள் இரத்து செய்வது தொடர்பான பத்திரிக்கை செய்தி</u>

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் காலியாக உள்ள கணினி இயக்குபவர் மற்றும் இளநிலை உதவியாளர் பணியிடங்களை நிரப்புவது தொடர்பாக, 17.10.2018 அன்று இணையதளம் மற்றும் நாளிதழ்களில் அறிவிக்கைகள் வெளியிடப்பட்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டு 17.11.2019, 30.11.2019 மற்றும் 01.12.2019 அன்று தேர்வுகள் தமிழகம் முழுவதும் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து 18.01.2020 மற்றும் 20.01.2020 அன்று நேர்முகத் தேர்வு சென்னையில் நடைப்பெற்றது. தற்போது மேற்காணும் எழுத்து தேர்வு, நேர்முகத் தேர்வு மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகள் அனைத்தும் நிர்வாக காரணங்களுக்காக இரத்து செய்யப்படுகிறது. தேர்வு நடத்தும் தேதி பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**